பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி வியாழன் வெளியீடு.

போர் 1 பொள்ளாச்சி. 6—9—51. விலை அரையணா. 6-பக்கம். வெற்றி 3

சட்டசபைக்கு யார் வேண்டும்?

ஸ்ரீ வி. கே. பி. தான் வேண்டும்.

ஸ்ரீ ஆசிரியர் அவர்களே! வரப்போகும் சட்டசபைத் தேர்தலுக்கு ஸ்ரீ வி. கே. பழனிசாமிக்கவுண்டரைத்தான் காங்கிரஸின் சார்பில் நிறுத்தவேண்டும். இவர் அனுபவம் முதிர்ந்தவர். தாலூக்காபோர்டு, ஜில்லாபோர்டுகளிலும், ராஜாஜி மந்திரியாய் இருந்தகாலத்தில் எம். எல். ஏ. யாகவும் இருந்து நிர்வாகத்தை திறமையாய் நடத்தியவர், நடத்துபவர். ஏழைகளுடனும், விவசாயிகளுடனும்நேரடியாக தொடர்பும், அனுதாபமும் உள்ளவர் லஞ்சம், பர்மிட் முதலியவைகளில் ஈடுபடமாட்டார் பணக்காரர்களுக்காக பர்மிட்களுக்கும், லைசென்ஸ்களுக்கும் மந்திரிகளிடமும், அதிகாரிகளிடமும் காவடி எடுக்கமாட்டார் தாலூக்காவில் எல்லோருடனும் நேரடித்தொடர்பு உள்ளவரும் எல்லோரின் அன்பையும் அனுதாபத்தையும் பெற்றவரும், நெடுநாளைய காங்கிரஸ்காரரும், சிறை சென்றவருங்கூட. முழுநேரமும் காங்கிரஸிற்காக வேலை செய்து வருபவர். நமது ஜில்லாவின் என் மாகாணத்தின் குறிப்பிட்ட தலைவர்களில் ஒருவருங்கூட. இவரைச் சட்டசபைக்கு அனுப்பினால் தாலூக்காவின் நலனில் அக்கரையும், சிரத்தையும்காட்டி ஏழைகளின் நலனில் உண்மையுடன் பாடுபடுவார் என்று நம்புகிறேன். தேர்தல் போர்டார் கவனிப்பார்களா?

(ராமசாமி)

ஸ்ரீ மகாலிங்கத்திற்கு ஆதரவு.

"பொள்ளாச்சி வாசி" ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். வரும் சட்டசபைத் தேர்தலில் ஸ்ரீ என் மகாலிங்கத்தைப் போன்றவர்கள் சட்டசபைக்குச் சென்றால் நமது நாடு அமெரிக்காவைப்போல் சுபீட்சமாக இருக்கமுடியும். சென்றதேர்தலில் உதவாக்கரைகளை ஊழியர்கள்என்ற பெயரில் சட்டசபைக்கு அனுப்பினோம் ஆனால் அவர்களால் இந்நாட்டிற்கும், நாட்டுமக்களுக்கும், காங்கிரஸிற்கும் ஒருவித நன்மையும் ஏற்படவில்லை. இன்று மகாலிங்கம் பணக்காரர்தான். பணக்காரராயிருந்தாலும் மக்களிடத்தில் நெருங்கிப்பழகுபவர். இளைஞர் காங்கிரஸிற்கு அவர்கொடுத்திருக்கும் திட்டங்களை நடைமுறையில் கொண்டுவருவார் என்ற நன்நோக்கத்தோடு ஸ்ரீ மகாலிங்கம் அவர்களையே அபேட்சகர்காகத் தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(பி எஸ். வெங்கிடேஸ்)

வரும் சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸிற்கு வெற்றி கிடைக்கவேண்டுமானால் ஸ்ரீ பி. நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்களின் மகன் ஸ்ரீ என். மகாலிங்கம் தான் நம்தொகுதிக்கு நிறுத்திவைக்கவேண்டும் ஸ்ரீ மகாலிங்கம் நம் நகருக்கு மாத்திரம் அல்ல நம் ஜில்லாவிற்கே முதியோர்கல்வி காங்கிரஸ் வேலை, இளைஞர்களின் முன்னேற்றம், ஏழை மாணவர்களுக்கு படிப்புவசதி, வேலையில்லாத படித்தவாலிபர்களுக்கு வேலைஇன்னும் எவ்வளவோ துறையில் அவர் சேவைசெய்து வருகிறார். ஆ... கையால் அவர்மேலும் எம். எல். ஏ. ஆ... வந்தால் நம் மாகாணத்திற்கு நன்மைசெ... வார். நிச்சயமாக செய்வார் என்று நான் நம்புகிறேன்.

(வெள்ளியங்கிரி)

ஸ்ரீ சேதுவுக்கும் ஆதரவு.

வரப்போகும் சட்டசபைத் தேர்தலி... பொள்ளாச்சித்தொகுதிக்கு திரு. பி. கே... சேதுராமசாமிக்கவுண்டர் அவர்களை நிறு...த்தினால் மிகவும் நன்மை ஏற்படும். ஏனெ...னில்? அவர் நமது நகராட்சியில் உள்ள... மக்களுக்காக எவ்வளவோ அரியசேவை...களைச் செய்திருக்கிறார். செய்துகொ...டும் வருகிறார். இவர்செய்த அரியசேவை...களை நினைக்கும்பொழுது அவர்தான் தே...ர்ந்தெடுக்க அருகதை உள்ளவர் என எ... அபிப்ராயம்.

(ஆர். நடராஜன்.)

வரப்போகும் பொதுத்தேர்தலில் ந... நகர் தொகுதிக்கு தொழில் முதலாளியு... நிலச்சுவான்தாரும் புனித காங்கிரஸி... பெயரால் நிற்பதாக ஊர் முழுவதும் வ...ந்தி. இப்படிப்பட்டவர்களை நிறுத்தினா... வரப்போகும் எதிர்காலத்தில் ஷியார்... ளின் தொழில்களை தேசிய மயமாக்குவ... மிகவும் கடினம் ஆதலால்நமது நகர் தி... சேர்மன் அவர்களை நிறுத்தினால் நம் நக... மக்களுக்கும் ஸ்தாபனத்தின் பெயரு...க்கும் நன்மை ஏற்படும் என்பது என... அபிப்ராயம்.

(எஸ். சுப்பையன்)

குறிப்பு:— (சேர்மன் ஸ்ரீ சேதுரா...சாமி தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை... எனத்தெரிகிறது.)

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 6—9—51. வியாழன்.

தேர்தல் வேகம்.

—○○○—

பொள்ளாச்சித்தாலூக்காவிற்கு சென்னைசட்டசபைக்கு இரண்டு பொதுஸ்தானங்கள் உண்டு. அதற்கு காங்கிரஸ்அபேக்ஷகராக கீழ்க்கண்டவர்கள் மனுச்செய்வதாகத் தெரிகிறது. ஸ்ரீமான்கள் வி. கே பழனிச்சாமிக் கவுண்டர், (வேட்டைக்காரன்புதூர்) என். மகாலிங்கம் (பொள்ளாச்சி). சி. சுப்ரமணியம் (கோவை), கே சுப்பேகவுண்டர் (சிங்கராம்பாளையம்), எஸ். எம். பழனிசாமி சிங்கராம்பாளையம், கோவிந்தராஜு நல்லட்டிபாளையம், சுப்ரமணியம் ரங்கம்புதூர், முத்துக்கருப்பண்ணசாமிக்கவுண்டர் மெட்டுபாவி, சி. பி சுப்பையா வாரப்பட்டி, பி. டி. ராமசாமி வாரப்பட்டி, இன்னும் சிலர் இருக்கலாம் இவர்களில் இரண்டுபேரை தேர்ந்தெடுக்கவேண்டிய பொறுப்பு தேர்தல் போர்டாருடையது. கிணத்துக்கடவில் ஓர் கூட்டம் நடைபெற்றது. பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். இந்தத்தடவை எந்தமாதிரியானவர்களை நிறுத்தவேண்டும் என்பதைப்பலர் பலர் பேசினார்கள். பொதுவாக ஸ்ரீ சி. சுப்ரமணியம் அந்தத்தொகுதிக்குச்சென்று சிலரைப்பார்த்து ஆதரவுதேட முயர்சித்ததால்தான், அவர் அங்கு நிற்கக்கூடாது. அந்தத்தொகுதியிலுள்ளவர்கள்தான் வேண்டும் என்பது தான் பலரது அபிப்பிராயம் என்று நாம் உணர்கிறோம். ஆகவே அந்தத்தொகுதியிலுள்ளவர்கள் விரும்பாத சி. சுப்ரமணியத்தை அங்கு நிறுத்தக் கூடாதென்று நாமும் சிபார்சு செய்கிறோம். அந்தத்தொகுதியில் சி. சுப்ரமணியத்திற்கு பலத்த எதிர்ப்பு இருக்கிறது என்பதை நாம் நேரில் கண்டோம். பலர்வந்து 21-ம் தேதியன்று தேர்தல்போர்டாரிடமும்சொல்லுவார்கள். அதை கவனித்து மதிக்கும்படி நாம்போர்டாரைக்கேட்டுக்கொள்ளுகிறோம்.

எம். எல். ஏ. க்கள் கருப்பா, சிகப்பா, தெரியாது.

பஸ் மோட்டார் வேட்டைகளில் இருக்கிறார்களாம்.

2-9-51 ல் கிணத்துக்கடவில் கிராம பொதுஜன சேவா சங்கத்தின் ஆதரவில் மெட்டுப்பாவி ஸ்ரீ முத்துக்கருப்பண்ணசாமிக் கவுண்டர் தலைமையில் நடைபெற்றகூட்டத்தில் கிணத்துக்கடவு, சோளப்பாளையம் வாரட்பட்டி பிர்க்காவுக்கு சட்டசபைக்கு எந்தமாதிரியான பிரதிநிதி வேண்டும் என்பதைப்பற்றி ஸ்ரீமான்கள் சுப்பே கவுண்டர், வாரப்பட்டி சுப்பையா, சுப்ரமணியம், பி. டி. ராமசாமி, எஸ். எம். பழனிசாமி வெங்கடாசலம், கோவிந்தராஜு, பி. எஸ், ரங்கசாமி, சி. என். நாகப்ப பிள்ளை, பி. எஸ். வேலுசாமி முதலியோர் பேசினார்கள்.

பேச்சுச் சுருக்கம்.

இப்போது உள்ளவர்களைப்போல் அனுப்பினால் கண்டிப்பாய் விவசாயிகளுக்கு இன்னும் பலவரிகள் வரும். விவசாயிகளுடன் தொடர்புள்ளவர்கள் வேண்டும். காங்கிரசின் பெயரால் சூதாட்டக்காரர்களும் சட்டஞானம் உள்ளவர்களும் தேவையில்லை. பதவியை துர்விநியோகப்படுத்தாதவர் வேண்டும். பொறுப்பும் கடமையும் உணர்ந்தவர்தான் தேவை. பணக்காரர்கள் ஆகாது. ஜாதியின் பெயரால் கூடாது. இப்போதுள்ள சட்டசபை மெம்பர்கள் கருப்பா, சிகப்பா என்பதுகூடத் தெரியவில்லை. அவர்கள் கிராமங்களுக்கே வருவதில்லை. பஸ், மோட்டார் வேட்டையில் இறங்கிவிடுகின்றனர். சென்ற தடவை மரக்கட்டையை அனுப்பினோம். இப்போது அது கூடாது. இரும்பு பர்மிட்களுக்கும் அதிகாரிகாரிகளிடம் கவாடி எடுப்போரும் கூடாது. இன்னும்பல விஷயங்கள் பேசப்பட்டது. தேர்தல் போர்டாரை சந்தித்து நிலைமையை எடுத்துச்சொல்ல கன்வீனர்கள் நியமிக்கப்பட்டது. கே. சுப்பேகவுண்டர், சி. பி. சுப்பையா, வாரப்பட்டி வேலுசாமி ஆகிய மூவர் கிணத்துக்கடவு தொகுதிக்கு விவசாயி விவசாயிகளுடன் தொடர்பு. நேர்மையும், திறமையும் உள்ளவர். லஞ்சம் வாங்காதவர் தொகுதியை சேர்ந்தவர். இப்படிப்பார்த்து நிறுத்த தேர்தல் போர்டாரை கேட்டுக்கொண்டும் தீர்மானம் பாஸ் செய்யப்பட்டது. தேநீர் விருந்துடன் வந்தனம்கூற கூட்டம் முடிந்தது.

தலைவர் பிரயாணம்!

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஸ்ரீ கே. காமராஜ் அவர்கள் வரப்போகும் தேர்தலுக்கு அபேக்ஷகர்களை எடுப்பதை முன்னிட்டு கீழ்க்கண்டவாறு சுற்றுப்பிரயாணம் செய்கிறார். இம்மாதம் 5-ம்தேதி முதல் 10-வரை டில்லியில் இருக்கிறார் 11-ம் தேதி சென்னை சேருவார். 16-ம் தேதி திருச்சி, 17 ல் திருநெல்வேலி, 18-ல் மதுரை, 19-ல் காரைக்குடி, 20ல் மதுரை, 21-ல் கோயமுத்தூர், 22-ல் ஊட்டி, ஈரோடு 23-ல் சேலம், 24-ல் கிருஷ்ணகிரி, 25-ல் வேலூர், 26-ல் சென்னை, 27, 28-தஞ்சாவூர், 29-ல்கூடலூர் 30-ம் தேதி சென்னை சேருவார். தலைவருடன் தேர்தல்போர்டு மெம்பர்களும் விஜயம்செய்வார்கள் எனத்தெரிகிறது.

அறிவிப்பு.

பொள்ளாச்சி டவுனில் உள்ள எல்லா மாவுமில்களும் இனிமேல் பிரதி வெள்ளி தோறும் விடுமுறை விடப்பட்டிருக்கிறது.

பொள்ளாச்சி
மாவுமில் சங்கத்தார்.

ஸ்ரீ திருமூர்த்திக்கு ஆதரவு.

ஹரிஜன் ஸ்ரீ பி. கே. திருமூர்த்தி அவர்கள் சுமார் 23-வருடகாலமாக காங்கிரஸிற்கும் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்கும் ஓயாமல் பாடுபட்டு வருகிறார். மேலும் பெருபான்மையான் ஹரிஜனங்களுக்கு தன்சொந்த சிலவிலேயே திருமணமும் செய்துவைத்தவர். கோயில்களுக்கு பொருளுதவி செய்திருக்கிறார். கள்ளுக்கடை மறியல் 1942-ல் போராட்டத்தில் பங்கு, ஹரிஜன மாணவர்களுக்கு படிப்புவசதி, பஞ்சகாலத்தில் காந்தியஊழியர் சங்கத்தின் மூலம் கஞ்சி ஊற்றுவதில் பெரும் பங்குகொண்டவர். மேலும் முனிசிபல் கவுன்சிலராகவும் உள்ளார். ஆகையால் அவருக்கு ஹரிஜனங்களுக்கு என்னநன்மைகள் செய்யவேண்டுமோ அது நன்றாகத்தெரியும். அதையும் செய்வார். ஆகையால் காங்கிரஸ் சார்பில் ஹரிஜன தொகுதிக்கு ஸ்ரீ பி. கே. திருமூர்த்தியையே தேர்ந்தெடுக்கவேண்டுகிறேன்.

(ஹரிஜன் கே. சுப்பன்)

மாணவர்களின் பரீட்சையின் காரணமாக நகர இளைஞர் காங்கிரஸ வாசகசாலையின் அலுவல்கள் 1-10-51 வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திர வாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கச் செட்டியார் & பிரதாஸ்.

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:

P. A. ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்ட்:

A. K. யாகூப்சாய

பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

'லக்க ஜோசியம்'

(7—9—51 முதல் 13—9—51 வரை) கே. பி. வி.

1	2	3	4	5	6	7	8	9
	B	C	D	E	F	G	H	I
J	K	L	M	N	O	P	Q	R
S	T	U	V	W	X	Y	Z	

MAN
1 4 1 5, 2+9+1+4+1+5
, 2+2=4 இந்த நெம்பர் 4 தான்.
AMAN என்கிற எண்ணிற்கு வ
ன் நெம்பர் 4யை கவனித்தால் பல
தெரியவரும். அதே மாதிரியாக
வொருவருடைய பெயர்களையும் கணி
யாக செய்துபலன் பார்க்கவும் அப்
ங்களுக்கு வசிய எண் தெரியாவிட்
மக்குஎழுதவும். பூரூஆயுள் பலன்
வேண்டுமானல் 14-அணு மணியா
ல்லது போஸ்டல்ஆர்டர் மூலமாக
னுல் விபரமான பூரு ஆயுள்பலன்
க்கும்.

கே. பி: வாசுதேவன்,
453, ஐ ரோடு, திருவொற்றியூர்,
சென்னை.

வெள்ளி - பணவரவு
சனி - புதுயோசனை
று — மனஉற்சாகம்
— மாதர் மனமகிழ்ச்சி
வாய் — நண்பர்கள் சகாயம்
— லாபம்
ன் - நட்பே துணை

வெள்ளி — நற்செய்தி
சனி — பிரயாணம்
— சவுக்கியக்குறைவு
— புதுகாரியம் வெற்றி
ாய் - உடம்பு அசௌகரியம்
— மந்த புத்தி
— மனக்கிலேசம்

வெள்ளி — எதிர்பாராத செலவு
சனி — மனக்கிலேசம்
று — மாதர் நலம்
— அசுபநாள்
வாய் கடன் உபாதை
— ரகசிய வெற்றி
ன் — நற்செய்தி

4
வெள்ளி - வீண்செலவு
சனி — கலகம்
ஞாயிறு — தாமதம்
திங்கள் - வேலைத்தடை
செவ்வாய் — காரியக்கேடு
புதன் — தெய்வ சிந்தை
வியாழன் — விகித வெற்றி

5
வெள்ளி — நண்பர் கூட்டம்
சனி - கௌரவம்
ஞாயிறு - நாணயம்
திங்கள் - காரிய அனுகூலம்
செவ்வாய் - புதுமுயற்சி
புதன் - சஞ்சாரம்
வியாழன் - புதுயோசனை

6
வெள்ளி - ஆடை ஆபரண சுக விருத்தி
சனி - நட்பே துணை
ஞாயிறு — செல்வாக்கு
திங்கள் — சகாயக்கவலை
செவ்வாய் — தொழில் அனுகூலம்
புதன் — கடன் உபத்திரவம்
வியாழன் — மந்தபுத்தி

7
வெள்ளி — தொழில்மேன்மை
சனி - உழைப்புக் கேற்ற பண வரவு.
ஞாயிறு — தைரியம்
திங்கள் — புகழ்
செவ்வாய் - விகித அனுகூலம்
புதன் - தொழில் மேன்மை
வியாழன் — தாமதம்

8
வெள்ளி - சகோதரமேன்மை
சனி — வெற்றிகரமானநாள்
ஞாயிறு - க்ஷேம லாப கீர்த்தி
திங்கள் — தெய்வகிருபை
செவ்வாய் - சத்தியபேச்சு
புதன் - புகழ் இன்பம்
வியாழன் — நஷ்டம்

9
வெள்ளி - குடும்பக்குழப்பம்
சனி - பக்தி
ஞாயிறு - மனஸ்தாபம்
திங்கள் - காரியத்தடங்கல்
செவ்வாய் - முன்ஜாக்கிரதை
புதன் - நஷ்டம்
வியாழன் - ஜயமில்லை

மாணவியர் இலக்கிய மன்றம்.

1-ம் தேதி சனி மாலை நகராண்மை பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவியர் இலக்கிய மன்ற துவக்க விழா ஸ்ரீ எஸ். மன்னமுத்துக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமதி சுபத்ராதேவி வரவேற்புக் கூறினர். பண்டைத்தமிழ்மகளிர்என்பதுபற்றி கோவை முனிசிபல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் கவியரசு வித்வான் ஸ்ரீ கோ. கு, நடேசக்கவுண்டர் சொற்பொழிவாற்றினர். ஆசிரியைகள் சார்பில் ஸ்ரீமதி பி. சரஸ்வதி அம்மாள், மாணவிகள் சார்பில் கே. சம்பூர்ணம் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

தேவகி

(சினிமா விமர்சனம்)

செல்லம் டாக்கீஸில் நடைபெறுகிறது தேவகி மட்டரகமான படங்களில்முதல் தரமானபடம் தேவகி. தமிழ்நாட்டு மங்கையரின் மானத்தைக்கெடுக்கும் படம் தேவகி. ஹிந்திப்படங்களை காப்பியடித்து தயாரிக்கப்பட்டபடம் தேவகி. இப்படத்தில் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு சுத்தமோர்சம். காட்சி ஜோடனைகள் சரியில்லை. ஆடைஅலங்காரம் காணக் கண்றாவி. தமிழர் நாகரீகத்தையே குழிதோண்டிப்புதைக்கும்படியாக இருக்கிறது. பாடல்கள் ஓரிரண்டு சுமார். வசனம் கேட்டுக்கேட்டுசலித்துப்போனது. புதிய அம்சம் ஒன்றுமே இல்லை ஹாஸ்யம் அளவுக்கு மீறினஆபாசம். எல்லாம் பத்திரிகைகளில் வந்த விகடத்துணுக்குகள். நடிப்பில் பாலச்சந்திரன் பரவாயில்லை. மாதுரிதேவியின் அளவுக்கு மீறின ஹைஜம்ப் நடிப்பு. ஜாணகி உணர்ச்சியில்லாமல் அபிநயம் பிடிப்பது போல நடிக்கிறார். கண்ணப்பாவுக்கு வேஷம்பொருத்தம் சரியில்லை ஜாணகிக்கு தம்பிபோல் இருக்கிறார். நம்பியார் நடிப்பு நம்குடும்பப்பெண்களை அவமானப் படுத்தும் வகையிலிருக்கிறது. பாரதியின் நடிப்பு பார்க்க சகிக்கவில்லை. வசனங்களை பள்ளிப்பிள்ளைகள் போல் ஒப்புவிக்கின்றனர். லலிதா பத்மினி ராகினி இவர்களின் நடனம் படத்திற்கு தேவையே இல்லை. ஏதோ அவர்கள் இரண்டு குதிகுதித்தால் ரசிகர்கள். ஏமாந்து காசை கொடுப்பார்கள் என்றஎண்ணத்தில் புகுத்தியிருக்கிறார்கள். ஆர், எஸ் மணியின் டைரெக்ஷன் சுமார். முடிவாக தேவகி பெண்களின் பண்பைக் கெடுக்குப்படம். பணம் படைத்தோருக்கு வக்காலத்து வாங்கும் படம். இவ்வருடம் வெளிவந்த படங்களில் படுமோசமானபடம்.

கேள்வி—பதில்.

கே: ஜாதி, மத கோட்பாடுகள் நம் இந்திய நாட்டிலிருந்து ஒழியவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

(அழகுமதி)

ப: சொந்த ஜாதியில் மணம்செய்து கொள்ளக்கூடாது என்று அரசாங்கம்சட்டம் போடவேண்டும்.

கே: விகடத்துணுக்கு உங்கள் பத்திரிகைக்கு அனுப்பினால் தாங்கள் பிரசுரிப்பீர்களா?

(எஸ். திருமலைசாமி)

ப: தகுதியானால் தாராளமாக ஏற்றுக்கொள்வோம்!

கே: தி. க. தோழர்களும் சினிமாத் தொழிலில் கியூ வரிசைப்போட்டிருக்கிறார்களா? அப்படியானால் ஆசைத்தம்பிக்கு பின் எந்தத் தம்பி வருகிறார் என்பதைத்தெரிவிக்கவும்?

(சி. கே. நடனம்)

ப; எந்தத்தம்பி வந்தாலும் எல்லாத் தம்பிகளும் சினிமா சீர்திருத்தம் என்று சொல்லி அகப்பட்டதை சுருட்டி சினிமா முதலாளித்துவத்திற்கு வக்காலத்துவாங்குபவர்தானே ஸார்!

கே: கட்டிடத்திற்கு நிதி என்று கழகக்காரர்கள் நிதி திரட்டினார்களே அதை என்ன செய்தார்?

(எஸ் பாலசாமி)

ப: உஸ் – சப்தம் போடாதீர்கள் அதைக்கேட்க உமக்கு உரிமையில்லை! என்று உம்மீது வசைபாட ஆரம்பித்து விடுவார்கள்.

கே: எழுத்தாளனாக நான் என்ன செய்யவேண்டும்?

(எஸ். பழனிசாமி)

ப: பழையபேப்பர் வாங்குபவனை உங்கள் வீடுதேடி நூறுமுறை நடக்கவைக்க வேண்டும்!

கே: பாகவதரின் 'அமரகவி'க்கும் பக்ஷிராஜாவின் 'காஞ்சனா'வுக்கும் வசனம் எழுதுபவர்கள் யார்?

(பி எஸ் வெங்கிட்டு)

ப: அமரகவிக்கு "சாதா" காஞ்சனாவுக்கு நாமக்கல்கவிஞர் புதல்வர் ரா. பால சுப்ரமணியம் ... ... எழுதுவதாகத்தெரிகிறது!

கே: காதல் என்றால் என்ன?

(நாகராஜன்)

ப: அது ஒரு வாட்டர்கலர் பாக்ஸ் ஸார்!

கே. உமக்கு வயதென்ன? கல்யாணம் ஆகிவிட்டதா! குழந்தைகள் எத்தனை?

(கே மாணிக்கவாசகம்)

ப: நீ என்ன ரேஷன் அதிகாரியா? அதை முதலில் சொல்லுங்கள்!

ஸ்ரீ என். ஆர். தியாகராஜன்,

2-ம் தேதி நம் நகருக்கு மதுரை ஜில்லாபோர்டு தலைவர் ஸ்ரீ என். ஆர். தியாகராஜன், ஜனாப் ஜெய்னுலாபுதீன், ஸ்ரீ சுப்பையா ஆகியோர் விஜயம்செய்தனர். அவர்களுக்கு பொள்ளாச்சி வாசி அலுவலகத்தில் ஆசிரியர் ஸ்ரீ பி எஸ். வேலுசாமி அவர்களால் ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது. மாலை 4-மணிக்கு இளைஞர் காங்கிரஸ் காரியாலயத்தில் ஸ்ரீ இரா. சுப்ரமணியம் தலைமையில் அ. பாசித் வரவேற்றார். அ. முத்துசாமி வரவேற்பிதழ்களை வாசித்தளித்தார். ஸ்ரீமான்கள் தியாகராஜன், சுப்பையா கோவை நகரகாங்கிரஸ் கமிட்டித்தலைவர் யோ. சாமுவேல், ஜனாப் ஜெய்னுலாபுதீன் ஆகியோர் இளைஞர்கள் நாட்டுக்குச்செய்யவேண்டிய கடமைகளை பற்றி பேசினார்கள். மாலை 6–30 மணிக்கு மயிலஞ்சந்தைப்பேட்டையில் காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ மரியதாஸ் தலைமை வகித்தார். ஜனாப் காதர்மைதீன் வரவேற்புக் கூறினார். ஸ்ரீமான்கள் சுப்பையா, கோவைஜில்லாபோர்டு தலைவர் வி. கே பழனிசாமிக்கவுண்டர், என். ஆர் தியாகராஜன், ஜனாப் ஜெய்னுலாபுதீன் ஆகியோர் இன்றைநாட்டின்நிலையும், எதிர் கட்சிகளின் பித்தலாட்டம், தேனீயில் நடந்த உண்மை சம்பவம் குறித்துநீண்ட நேரம் சொற்பொழிவாற்றினார்கள். ஸ்ரீ எம். ராமசாமிக்கவுடர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது. இரவு 10-மணிக்கு ஹரிஜன் உணவு விடுதியில் தலைவர்களுக்கு வரவேற்பு அளிக்க பட்டது. தலைவர் ஸ்ரீ தியாகராஜன் ஹரிஜன மாணவர்களின் கடமையைப்பற்றி பேசிய பின்னர் ஸ்ரீ ஏ. கே. சுப்பிரமணியம நன்றிகூற தலைவர்கள் கோவைசென்றனர்.

நகர ஒலிபரப்பியில் பிரசங்கம்,

(மாலை 7—7-15 வரை)

6-9-51 வியாழன் ஸ்ரீ பால்ஜேசுதாசன் முதியோர்கல்வி சாத்தியமா — 13-ம் தேதி ஸ்ரீ ஜி. வெங்கிடசுப்பு பிள்ளை மாணவர்கள் முதியோர் கல்விக்கு எவ்வித உதவி புரியலாம். 20-ம் தேதி அ. பாசித். முதியோர் கல்விக்காக எவ்வாறு பொதுஜன ஒத்துழைப்பைபெறுவது. 27-ல் ஸ்ரீ வி. ஆர். கிருஷ்ணசாமி பி. ஏ. கிராமங்களில் முதியோர்கல்வி பரப்பும் வகைகள் என்பது பற்றிபேசுவர்.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட் & A. C. C. நீலகிரி பிராண்டு சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
S. நாகமாணிக்கம்செட்டியார் & பிரதர்,
போன் நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி.

மாடர்ன் கபே.
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

ஸ்ரீ சீத்தராம அய்யர் வழக்கில் தீர்ப்பு.

பொள்ளாச்சி ஸ்ரீ பி. வி. சித்தராம அய்யர் அவர்கள் தம்முடைய இடக்ககராறின் காரணமாக பொள்ளாச்சி முனிசிபாலிடியின் பேரில் தொடரப்பட்டவழக்கில் 30–8–51 ல் சென்னை ஹைகோர்ட்டில் தீர்ப்பு கூறப்பட்டது. ஒரு முறை லைசென்சு கொடுத்தபிறகு சில புது நிபந்தனைகளைப்போட்டு இவைகளை செய்யாவிட்டால் கொடுத்த லைசென்சு ரத்துசெய்ய படுமென்று சொல்ல முனிசிபாலிடிக்கு அதிகாரமில்லை. ஆகையால்கொடுத்த லைசென்சை ரத்துசெய்ய கவுன்ஸில் தீர்மானித்தது செல்லுபடியாகதென தீர்ப்பளிக்கப்பட்டது. ஷை தீர்ப்பானது ஸ்ரீ பி வி சித்தாராம அய்யர் அவர்களுக்கு அனுகூலமானது.

மாவுமில்காரர்கள் கூட்டம்.

1–9–51 ல் சரஸ்வதி மாவுமில்லில் பொள்ளாச்சி மாவுமில் சங்கத்தாரின்கூட்டம் ஸ்ரீ கே. எம். சவுண்டப்ப செட்டியார் தலைமையில் நடைபெற்றது. புது வருடத்திற்கு ஸ்ரீமான்கள் கே. எம். சவுண்டப்பசெட்டியார் தலைவர், பி குப்புசாமிசெட்டியார் உபதலைவர், பி. கணபதி செட்டியார் காரியதரிசி, நாராயணன் உதவிகாரியதரிசி, எஸ். ராமசாமி செட்டியார் பொக்கிஷதார் ஆகியோர் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் டவுனிலுள்ள எல்லா மாவுமில்களும் ரேஷன் விடுமுறை தினமான வெள்ளிக்கிழமையே வாராந்திர விடுமுறைதினமாகவைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

1-ம் தேதி வள்ளுவர்நாடகமன்றத்தில் தமிழ் எழுத்தாளர் வ. ரா. மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

அறிவிப்பு.

உறுதிக்கும், நேர்த்தியான வேலைப்பாட்டிற்கும்
சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு

சிமிட்டியை

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு
பொள்ளாச்சி, உடு[illegible]டை,
பழனி
ஆகிய இடங்களில் க[illegible]ள்
திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, பொள்ளாச்சி.



RAJA VENKATRAM GHEE STORES
PROP. V. C. ALAGIRISWAMY NAIDU
COIMBATORE.

குறைந்த விலையில்
நம்பிக்கையான இடம்

K. ராமச்சந்திரன்,

பித்தளைப்பாத்திர வியாபாரம்
பெரியகடை வீதி,
கோவை.

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. விக்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.

தலைவர்:— **S. R. Chandran.**

வெற்றிகரமாக நடைபெறுகிறது
கோவை கர்நாடிக்கில்

நான்காவது வாரம்
எனெஸ்கே பிலிம்ஸ்

மணமகள்

நடிகர்கள்
கிருஷ்ணன், மதுரம், பாலையா, சகஸ்ரநாமம், டி. பாலசுப்ரமணியம்
லலிதா — பத்மினி, பாண்டியன், புளிமூட்டை ராமசாமி.
டைரெக்ஷன்:
என். எஸ். கிருஷ்ணன்
கோவை நீலகிரி ஜில்லாக்களுக்கு விநியோகஸ்தர்கள்:
கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட்,
கோயமுத்தூர்.

Edited & Published by K. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi